**கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் - 2025**

-----------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் (“பல்கலைக்கழகம்”) 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆயுர்வேதக் கோட்பாடுகள் கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரினால் 2 வருட காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,450,000 ஆக இருந்த செயற்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 160,000 ஆராய்ச்சி மானிய முற்பணம் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்ளாமல் சுமார் 12 மாதங்களின் பின்னர் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி மானியங்களை கள அடிப்படையிலான ஆய்வுகளுக்குப் பயன்படுத்தும்போது ஏற்கக்கூடிய செலவுகள் தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக, மேற்குறித்த ஆய்வைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும்போது நிதியத்திலிருந்து செலவுகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டதால், பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | குறித்த நிபந்தனைகளுக்கு அமைவாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஆராய்ச்சிகளுக்ாக ஆராய்ச்சி மானியங்கள் வழங்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | முதலீடுகளை மேற்கொள்ளும்போது குறித்த விடயத்திற்குப் பொறுப்பான | 2025 ஆம் ஆண்டிற்குரிய அனைத்து முதலீடுகளும் பல்கலைக்கழக மானியங்கள் | நிதிச் சட்டம் மற்றும் குறித்த பல்கலைக்கழக சுற்றறிக்கைகளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 2019 ஜுலை 29 ஆம் திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கைக் கடிதம் இலக்கம் 4/2019 | அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற போதிலும், அவ்வாறான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ளாமல், பல்கலைக்கழகத்தினால் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 403,668,351 நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை 04/2019 இற்கு அமைவாக, பல்கலைக்கழகத்தின் நிதிக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2026 ஆம் ஆண்டிற்குரிய முதலீடுகளுக்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | அமைவாக, நிதியை முதலீடு செய்வதற்கு முன்னர் குறித்த அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 39(4) ஆம் பிரிவு | இச்சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், அதாவது 2025 ஆகஸ்ட் 07 ஆம் திகதிக்கு முன்னர், ஏதேனும் நியதிச்சட்ட ரீதியானதல்லாத நிதியத்தை கலைப்பது அல்லது தொடர்ந்து பேணுவது அவசியமாக இருந்தால், திறைசேரியின் செயலாளருடன் கலந்தாலோசித்து நிதி அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் பட்சத்தில், அது நியதிச்சட்ட ரீதியான நிதியமாக மாற்றப்பட வேண்டும் என்ற போதிலும், கூட்டுத்தொகை ரூபா 2,453,143 ஆக இருந்த 03 நிதியங்களை கலைப்பதற்கோ அல்லது நியதிச்சட்ட ரீதியான நிதியங்களாக மாற்றுவதற்கோ | குறித்த கணக்குகள் நிதியங்களின் கணக்குகளாக கணக்கில் வைக்கப்படாமல், பல்கலைக்கழக நிதியத்தின் கீழ் தனியான செலவுத் தலைப்புகளின் கீழ் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | பல்கலைக்கழக நிதியத்தின் கீழ் கணக்கில் வைக்கப்படும் குறித்த நிதியங்கள் தொடர்பில் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய திறைசேரியின் செயலாளரின் 2021/01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு அமைவாக வெளியிடப்பட்ட நிறுவன நல்லாளுகை தொடர்பான வழிகாட்டலின் 3.2 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்கள் நிறைவடைவதற்கு முன்னரும், வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரும் வருடாந்த செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டம் (APRM) நடத்தப்பட வேண்டும் என்ற போதிலும், பல்கலைக்கழகத்தினால் அவ்வாறு செயற்படப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டத்தை (APRM) 2026 மே மாதத்திற்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக வருடாந்த செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2024 நவம்பர் 25 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை சாராத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.3 மற்றும் 4.1.1 (ஆ) ஆம் பந்திகள் | ஒவ்வொரு பெறுகை நிறுவனமும், நடுத்தர கால வரவு செலவுத் திட்டக் கட்டமைப்பிற்கு அமைவாக 03 வருட காலப்பகுதிக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் பிரதான பெறுகைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் என்பதுடன், விரிவான வருடாந்த பெறுகைத் திட்டத்தில் குறித்த ஒவ்வொரு பெறுகைப் பொதிக்கும் விலைக்கேள்விகளைக் கோரும் திகதியிலிருந்து ஒப்பந்தத்தை வழங்குதல் மற்றும் நிறைவு செய்தல் வரையிலான பெறுகை நடவடிக்கைகள், உப நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய முன் மற்றும்/அல்லது பிந்திய மீளாய்வு நடவடிக்கைகளுக்கான காலவரையறைகள் | 2025-2027 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், வருடாந்த நிதியேற்பாடுகள் தொடர்பில் உறுதியான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்னர், பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதான பெறுகைத் திட்டமும் விரிவான பெறுகைத் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், பல்கலைக்கழகத்தினால் அவ்வாறு செயற்படப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | நிதி மற்றும் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2025 மார்ச் 22 ஆம் திகதிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 1/2025 இன் 3.1 ஆம் பந்தி | சம்பளம் மற்றும் ஊதியங்கள், மருத்துவப் பொருட்கள், ஒப்பந்த அடிப்படையிலான குத்தகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரிகள், ஓய்வூதிய நன்மைகள், அரச கடன்களுக்கான வட்டி செலுத்தல்கள், அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் நியதிச்சட்ட ரீதியான அல்லது ஒப்பந்த அடிப்படையிலான கடப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் உகந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், ஏனைய செலவுகளை சிக்கனமான முறையில் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துவது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரமின்றி, 205 ஊழியர்களுக்காக சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் தனியார் துறையைச் சேர்ந்த காப்புறுதி | 2015 மார்ச் 13 ஆம் திகதியன்று நடைபெற்ற 912 ஆவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் கூட்டத்தில், பல்கலைக்கழக ஊழியர்களுக்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்றை நிறுவுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, இப்பல்கலைக்கழகத்திற்கும் திறந்த விலைக்கேள்விகளைக் கோருவதன் மூலம் சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறுவனமொன்றுக்கு ரூபா 3,080,612 காப்புறுதிப் பங்களிப்பாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2023 ஜனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/214/ 19/2023 ஆம் இலக்க திறைசேரியின் செயலாளரின் கடிதத்தின் 5 ஆம் பந்தி | பிணைமுறி உடன்படிக்கைகளை மீறியமை தொடர்பில் அறவிடப்படும் தொகைகள், பிரதானமாக கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடனான/சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறைகளைப் பெற்ற பல்கலைக்கழகப் பணியாளர் உறுப்பினர்களுக்காக குறித்த காலப்பகுதியில் அரசாங்கத்தினால் தாங்கப்பட்ட செலவுகளை மீளளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் அறவிடல்களாகும். எனவே, குறித்த நிதியங்களை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தாமல், கிடைக்கப்பெற்றவுடன் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு குறித்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிணை உடன்படிக்கைகளை மீறியமை தொடர்பில் நடப்பாண்டில் அறவிடப்பட்ட ரூபா 1,991,160 உட்பட கூட்டுத்தொகை ரூபா 9,577,618 திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 நவம்பர் 09 ஆம் திகதிய UGC/DA/F/Bond Violation ஆம் இலக்க கடிதத்திற்கு அமைவாக, குறித்த நிதியங்களை பல்கலைக்கழகத்தின் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், குறித்த அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது தொடர்பில் எதிர்காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

### 1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஜுலை 18 ஆம் திகதியிட்ட SEC/2023/02 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்திக்கு அமைவாக, ஊழியர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து, பயண அல்லது அதனுடன் தொடர்புடைய வசதிகளுக்கான நன்மையின் முழுமையான பெறுமதி முற்பண தனிநபர் வருமான வரியை (APIT) கணக்கிடும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், அதற்கு முரணாக, குறித்த கொடுப்பனவுகளில் 25 சதவீதம் மட்டுமே முற்பண தனிநபர் வருமான வரியைக் கணக்கிடும்போது கருத்திற்கொள்ளப்பட்டதன் காரணமாக, 06 உத்தியோகத்தர்களுக்குரிய முற்பண தனிநபர் வருமான வரி ரூபா 1,056,150 இனால் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பில் கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | புதிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக, நன்மையின் முழுமையான பெறுமதி முற்பண தனிநபர் வருமான வரியைக் கணக்கிடும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

பல்கலைக்கழகத்தின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 192,135,139 மிகையாக இருந்ததுடன், அதற்கு ஒத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா 31,523,807 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிப் பெறுபேற்றில் ரூபா 160,611,332 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இவ்வளர்ச்சிக்கு பரிமாற்றமல்லாத கொடுக்கல் வாங்கல்கள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் அதிகரித்தமை பிரதானமாகக் தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 1,267,949,293 ஆக இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் அது ரூபா 954,171,502 ஆக இருந்ததன் காரணமாக, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 36 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மொத்த செயற்பாட்டு செலவு ரூபா 932,470,512 ஆக இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் மொத்த செயற்பாட்டு செலவு ரூபா 805,488,497 ஆக இருந்ததன் காரணமாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் மொத்த செயற்பாட்டு செலவு ரூபா 126,982,015 இனால், அதாவது 16 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

உள்நாட்டு மருத்துவக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்தல், உள்நாட்டு மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்துவதன் மூலம் அது தொடர்பான அரச உயர்கல்விக்கான அணுகலை மேம்படுத்துதல், உள்நாட்டு மருத்துவக் கல்வித் துறையில் உயர்தர ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்கள் மூலம் கல்விசார் நிபுணத்துவத்தை மேம்படுத்துதல் ஆகியவை பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுள் அடங்குகின்றன.

குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, உள்நாட்டு மருத்துவ பீடம், உள்நாட்டு சுகாதார விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடம், உள்நாட்டு சமூக விஞ்ஞான மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடம் மற்றும் பட்டப்பின் படிப்பு பீடம் ஆகிய 04 பீடங்களின் கீழ் 14 கற்கைப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், அவற்றின் மூலம் 09 இளங்கலைப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் 06 பட்டப்பின் படிப்புப் பாடநெறிகளும் வழங்கப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தினால் இளங்கலைப் பட்டப்படிப்பு மட்டத்திற்காக 505 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், 2025 ஆம் ஆண்டில் 83 பட்டதாரிகளையும் 43 பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளையும் உருவாக்கியிருந்தது.

## 3.1. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மோசடி மற்றும் ஊழல் குறைவடையும் வகையில் வலுவான உள்ளக மேற்பார்வை முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாமல், ஆயுர்வேத மருத்துவ நிலையத்தின் சேவைகளை வழங்குதல், கட்டணங்களை அறவிடுதல், பற்றுச்சீட்டுகளை வழங்குதல் உள்ளிட்ட முழுமையான உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறை மிகவும் பலவீனமான முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | “சுய சுவய” செயற்திட்ட முன்மொழிவை மீளாய்வு செய்யுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, புதிய செயற்திட்ட முன்மொழிவு 2026 மே மாதம் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | “சுய சுவய” செயற்திட்ட முன்மொழிவை மீளாய்வு செய்யுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, புதிய செயற்திட்ட முன்மொழிவு 2026 மே மாதம் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) | 2022 ஜனவரி 03 ஆம் திகதியிட்ட 01/2022 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4(i) ஆம் பந்தி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XXIII ஆம் அத்தியாயத்தின் 2.6 மற்றும் 2.9 ஆம் பந்திகளுக்கு அமைவாக, நூலகப் புத்தகத் தொகுப்பு 100,000 இற்கும் குறைவாகக் காணப்படுமாயின், நூலகப் பொருட்களின் சரிபார்ப்பு வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், பொருள் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக்கோவையின் XXIII ஆம் அத்தியாயத்தின் 2.15 ஆம் பந்திக்கு அமைவாக நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மெய்மையாய்வு சபையினால் நூலகப் புத்தகங்கள், பருவ இதழ்கள் போன்றவை கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நூலகப் புத்தகங்களை மெய்மையாய்வு செய்வதற்கான சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவிற்கு அமைவாக, உயர்கல்வி நிறுவனமொன்றில் / கல்வியியற் நிறுவனமொன்றில் சேவையாற்றும் ஆட்களின் வருகை மற்றும் வெளியேறலைப் பதிவு செய்வதற்காக இலத்திரனியல் கைவிரல் அடையாள இயந்திரமொன்று / வேறு அவ்வாறான உபகரணமொன்று பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறான இயந்திரமொன்று இல்லாத சந்தர்ப்பத்தில் வருகை மற்றும் வெளியேறலைப் பதிவு செய்வதற்கான பதிவேடொன்று பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாளர்களின் வருகை மற்றும் வெளியேறல் பதிவேடொன்றின் / இயந்திரமொன்றின் மூலம் முறையாக உறுதிப்படுத்தப்படாமல், மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 312,696,970 செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த கற்கைப் பிரிவுத் தலைவரின் மூலம் அக்கற்கைப் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள அனைத்து கல்விசார் பணியாளர்களினதும் வருகை உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் சம்பளம் செலுத்தப்படுவதுடன், இதன்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை 01/2018 இற்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வருகை, வெளியேறல் மற்றும் விடுமுறைப் பதிவுகளைப் பேணுவதற்கான முறையான செயன்முறையொன்று நிறுவப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் மீது மாணவர்களுக்குக் காணப்படும் ஈர்ப்பு குறைவடைந்தமை மற்றும் பாடநெறிகளுக்கான மாணவர்களின் கேள்வி குறைவடைந்தமை காரணமாக, கடந்த 05 வருட காலப்பகுதியில் | தற்போது, உயர்கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இணைந்து, பாடநெறிகள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக விசேட குழுக்களை நியமித்து | பாடநெறிகள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து, மாணவர் ஈர்ப்பை அதிகரிப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்குமாறு நிர்ணயிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும், பல்கலைக்கழகத்தினால் ஒவ்வொரு கற்கைப் பிரிவிற்கும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் 19 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையிலான பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. | நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | புதிய செயன்முறையொன்று நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டு சுகாதார விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் 03 திணைக்களங்களின் 2020/2021, 2021/2022 மற்றும் 2022/2023 கல்வியாண்டுகளுக்குரிய பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களில் கணிசமான எண்ணிக்கையிலான மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையத் தவறியிருந்தனர். இவ்வாறு பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய மாணவர்களின் எண்ணிக்கை, பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 26 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலானதாகக் காணப்பட்டது. | மாணவர்களின் சித்தியடைதல் வீதத்தை அதிகரித்து, மேலும் வினைத்திறன்மிக்க பட்டதாரிகளை தொழில் சந்தைக்கு வழங்குவதற்கான பொறுப்பு தொடர்பில் உள்நாட்டு சுகாதார விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி உள்ளிட்ட அனைத்து பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், ஆய்வுக் கட்டுரைச் செயற்பாடுகள், களப் பயணங்கள், வெளிவாரி விரிவுரைகள், பல்வேறு செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து பாடங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு காணப்படும் ஆர்வத்தை மேம்படுத்துவதற்காக பீடத்தினால் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவதற்கான காரணிகளை ஆராய்ந்து, பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 நவம்பர் 17 ஆம் திகதியிட்ட 15/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைக் கடிதத்திற்கு அமைவாக, பரீட்சைகள் நடத்தப்படும் திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும் என்ற போதிலும், 08 பட்டப்படிப்புப் பாடநெறிகளுக்குரிய 82 பாடங்களின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 05 மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | பட்டப்படிப்புப் பாடநெறிகளுக்கான உப விதிகளைத் தயாரிக்க வேண்டியிருந்தமை, பணியாளர் பற்றாக்குறை, கல்விசார் பணியாளர் / நிர்வாக சேவை வேலைநிறுத்தம், வெளிவாரி விரிவுரையாளர்களினால் மேலதிக காலம் எடுத்துக்கொள்ளப்பட்டமை, முன் பெறுபேறுகள் குழுக் கூட்டங்களின்போது அடையாளம் காணப்பட்ட தவறுகள் மற்றும் உப விதிகள் தொடர்பான பிரச்சினைகளைத் திருத்தியமை, | பரீட்சைகள் நடத்தப்படும் திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாணவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தமை போன்ற காரணங்களினால் பெறுபேறுகள் தாமதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XXIII ஆம் அத்தியாயத்தின் 4.10 மற்றும் 4.10 (அ) ஆம் பந்திகளுக்கு அமைவாக, தமது நிறுவனத்தில் குவிந்து காணப்படும் பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்ற சொத்துக்கள் ஒவ்வொரு மூன்று (03) மாதங்களுக்கும் பொருத்தமான செயன்முறைகளைப் பின்பற்றி கைத்தவிர்க்கப்பட வேண்டும் என்ற போதிலும், 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் மூலம் கைத்தவிர்ப்பதற்காக அடையாளம் காணப்பட்ட பொருட்களை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தவிர்க்கப்பட வேண்டியவையாக அடையாளம் காணப்பட்டுள்ள பொருட்கள் தற்போது ஏலத்தில் விற்பனை செய்வதற்காக விலைக்கேள்விகள் கோரப்பட்டுள்ளன. | பொருள் மெய்மையாய்வின் மூலம் கைத்தவிர்ப்பதற்காக அடையாளம் காணப்பட்ட பொருட்கள் துரிதமாக கைத்தவிர்க்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | "சிய சுவய" செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,183,000 செலவில் விக்கும் உயனவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 10 வணிகக் கூடங்கள் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | நிர்மாணிக்கப்பட்டுள்ள வணிகக் கூடங்களை முறையாகப் பயன்படுத்தி வருமானத்தை அதிகரிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | மேற்குறித்த வணிகக் கூடங்களை பயனுள்ள பணிக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | "சிய சுவய" செயற்திட்டத்திற்குரிய ஆயுர்வேத சிகிச்சை மற்றும் ஆலோசனை நிலையம் நடத்தப்பட்டு வருகின்ற வாடகைக் கட்டிடத்தின் மூன்றாவது மாடியில், | இவ்வுபகரணங்கள் கௌமாரபிருத்திய மற்றும் பெண் நோயியல் கற்கைப் பிரிவின் கீழ் நடத்தப்படும் அழகுக்கலைப் பாடநெறிகளுக்காக வார இறுதி நாட்களில் பயன்படுத்துவதற்கு | கௌமாரபிருத்திய மற்றும் பெண் நோயியல் கற்கைப் பிரிவுகளை துரிதமாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் |

| | | |
|---|---|---|
| கௌமாரபிருத்திய மற்றும் பெண் நோயியல் கற்கைப் பிரிவிற்குச் சொந்தமான கட்டில்கள், கதிரைகள், மேசைகள் உள்ளிட்ட பல சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | அபிவிருத்தி செய்ய வேண்டும். |

**3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதனப் பணிகளிலான தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ''சிய சுவய'' செயற்திட்டத்திற்குரிய ஆயுர்வேத சிகிச்சை மற்றும் ஆலோசனை நிலையத்திற்காக 11 செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும், முன்மொழியப்பட்ட 06 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உள்நாட்டு உணவு விற்பனை நிலையத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 1 ½ வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும், செயற்திட்ட முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டிருந்த 11 செயற்பாடுகளில் 05 செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாமல் போயிருந்தது. | ''சிய சுவய'' செயற்திட்ட முன்மொழிவை மீளாய்வு செய்து, அதில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து செயற்பாடுகளும் துரிதமாக நிறைவுசெய்யப்பட வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்குத் தேவையான விடுதி வசதிகள் தொடர்பில் முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமல், 189 மாணவர்களுக்கும் 299 மாணவிகளுக்குமாக 12 விடுதிகள் தனியார் துறையிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக, 30 மாணவர்கள் மற்றும் 51 மாணவிகள் என மொத்தம் 81 மாணவர்களுக்காக தேவையற்ற வகையில் விடுதிகள் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தன. | தற்போது முழு இயலளவும் பயன்படுத்தப்பட்டு, விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | சரியான தேவையை முன்னறிவிப்பு செய்து, விடுதிகளை வாடகைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதியிட்ட 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு அமைவாக, அரசாங்க நிறுவனமொன்றினால் பயன்படுத்தப்படும் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனமும் குறித்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த 06 அரசாங்க வாகனங்களை சட்டரீதியாகப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களையும் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதியிட்ட 30/2016 ஆம் இலக்க அரசாங்க வாகனங்களைப் பராமரிப்பது தொடர்பான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கு அமைவாக, ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத காலவரையறை நிறைவடைந்ததன் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் பயணித்ததன் பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பான பிரதான திருத்தப் பணியொன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஆகிய சந்தர்ப்பங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், | எதிர்காலத்தில் அவ்வாறு செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பல்கலைக்கழகத்தினால் அதற்கமைவாக செயற்படப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 1645 (அ) இற்கு அமைவாக, பொதுப் படிவம் 267 இன் பிரகாரம் ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகன ஓட்டப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும் என்ற போதிலும், பல்கலைக்கழகத்தினால் அவ்வாறான பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டும் முழுமையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | ஓட்டப் பதிவேடுகளை முறையாக நாளதுவரையாக்கிப் பேணுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணக் கோவைக்கு அமைவாக ஓட்டப் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ‘‘சிய சுவய’’ செயற்திட்டத்தின் 2 ஆம் கட்டத்திற்கான ரூபா 14,862,500 ஆக இருந்த செலவின மதிப்பீடு ரூபா 34,718,179 ஆக, அதாவது செலவு 134 சதவீதத்தினால் அதிகரிக்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, வரவு செலவுத் திட்ட ஆவணம் பயனுள்ள கட்டுப்பாட்டு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முதலாவது வரவு செலவுத் திட்டத்திற்கும் இரண்டாவது திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கும் இடையில் செலவினம் 134 சதவீதத்தினால் அதிகரித்தமை, வாடிக்கையாளர்களின் பின்னூட்டக் கருத்துக்கள், செயற்திட்ட முகாமைத்துவக் குழுவினால் அடையாளம் காணப்பட்ட புதிய திட்டங்கள் மற்றும் தேவைகளுக்காக முன்மொழியப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கான நிதியேற்பாடுகள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டமையினால் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | முறையான முன்னறிவிப்புடன் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |